**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**அ.வ.எண்.111/2021**

**Deposition of witness of Defendant – D.W.1 (தனசாமி)**

**25.03.2026**

**பிரதிவாதிகள் தரப்பு 1 வது சாட்சி தனசாமி என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது செட்டில்மென்ட் ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த செட்டில்மென்ட் ஆவணம் யார் பெயரில் இருந்தது என்றால் ஜமால்முகமது பெயரில் இருந்தது.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணங்களை படிக்க முடியுமா என்றால் தமிழில் இருந்தால் படிக்கலாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் பதிவேடு யார் பெயரில் உள்ளது என்றால் கருப்பையா என்ற பெயரில் உள்ளது.

3. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பட்டா பாஸ்புத்தகம் யார் பெயரில் உள்ளது என்றால் கருப்பையா பெயரில் தான் உள்ளது. ஜமால்முகமது பெயரில் உள்ளதாக சொல்லும் ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஜமால்முகமது பெயரில் உள்ளதாக சொல்லும் ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. கிரையம் வாங்குவதற்கு முன்பு யார்யாரிடம் விசாரித்து என்னென்ன ஆவணங்கள் பார்த்தேன் என்றால் ஜமால்முகமதுவின் பொது அதிகார முகவர் சீனிவாசன் மூலம் வருவாய் அலுவலர்களின் ஆவணங்களை சரிபார்த்து தான் கிரையம் வாங்கினேன்.

5. நான் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 2014 ஆம் ஆண்டு கிரையம் வாங்கினேன். ஜமால்முகமது உயிருடன் உள்ளரா என்றால் உயிருடன் உள்ளார். தாவா சொத்து ஜமால் முகமதுவிற்கு சொந்தமானது என்றும், வாதிகள் குடும்பத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

6. தாவா சொத்துக்களை பொறுத்து ஜமால் முகமது பெயரில் உள்ள ஆவணங்கள் என்வசம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

7. தாவா சொத்துக்களை நான் எந்த வகையில் அனுபவம் செய்து வருகிறேன் என்று எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாதிகளின் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பார்த்தேனா என்றால் நியாபகம் இல்லை.

8. வழக்குரையில் குற்ற வழக்கு பற்றி வாதிகள் கூறியுள்ளார்கள் என்றால் இல்லை. தாவா கிராமத்தை சேர்ந்த வருவாய்துறையினர் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு புதுக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் அதை பற்றி வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றும், அதை தெரிந்து கொண்டே தற்போது தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. இவ்வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரைய ஆவணம் மற்றும் பட்டா உள்ளிட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் நான் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
10. வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது போல் தாவா சொத்துக்களை வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், அதனால் வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.
11. ஜமால்முகமதுவிற்கு முன்பு ஏற்பட்டதாக சொல்லும் பொது அதிகார ஆவணத்தை தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தையும் பார்த்துவிட்டேன் என்றும், அவை எனக்கு பாதகமாக இருப்பதால் நியாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.
12. வாதி கோரியுள்ளபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. நான் நல்லெண்ண கிரையதாரர் அல்ல என்றும், மூல ஆவணங்கள் எதையும் பார்க்காமல், கிரைய ஆவணம் மற்றும் பொது அதிகார ஆவணத்தையும் மட்டுமே பார்த்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.
13. என்னென்ன ஆவணங்கள் பார்த்தேன் என்றால் ஜமால்முகமது வாங்கிய கிரையப்பத்திரம், சிட்டா, பட்டா மற்றும் ஒப்பந்தம் ஆகியவற்றை பார்த்தேன். மேலே கண்ட ஆவணங்களின் படியும், எனது கிரையப்பத்திரத்தின் படியும் நான் வங்கியில் பெற்ற கடன் வாதிகளின் வழக்கை எவ்விதத்திலும் பாதிக்காது என்றால் சரியல்ல.
14. வங்கியில் நான் கடன் பெறும்போது எழுதிக்கொடுத்த ஆவணங்கள் ஒப்படைவு பத்திரத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**S/d – C. Rajesh, B.A.B.L.,**
**சார்பு நீதிபதி, கீரனூர்.**